1972 மார்ச் 4]

ஆக்குகின்ற முறையில் கிராம அதிகாரிகளிடம் கொடுக்கலாமா? ஊராட்சித் தலைவர்களிடம் கொடுக்கலாமா? ஹான்ரரி மெஜிஸ்திரேட் இருக்கிறார்களே அவர்களிடம் கொடுக்கலாமா என்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்துவருகிறது.

திரு. ஏ. சி. நரசிம்மன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்துத் திருமணங்களைப் பதிவு செய்யும் நோக்கம் இருக்கிறது என்று தெரிவித்தார்கள். ஜாதி மத பேதம் இல்லாமல் தமிழ் நாட்டிலே இருக்கிற அத்தனை திருமணங்களையும் பதிவுசெய்யும் சட்டம் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தந்த மதத்திற்கு என்று தனியாகச் சட்டங்கள் இருக்கின்றன. எந்த மதத்தினைச் சேர்ந்தவரும் பதிவுசெய்யும் அலுவலகத்தில் பதிவுசெய்துகொள்ளலாம் என்று சட்டம் இருக்கிறது. இந்து திருமணச் சட்டத்திலே பதிவுத் திருமணங்கள் செய்து கொள்வதற்கான வாய்ப்புக்களை உருவாக்குவதற்காகச் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்து மதத்தில் நடைபெறும் திருமணங்களைப் பொறுத்த வரையில் பதிவுசெய்துவிட்டு திருமணம் செய்துகொள்ளமுடியாது, திருமணம் செய்துவிட்டு பதிவு செய்துகொள்ளலாம். பதிவுசெய்து கொள்ளும் வாய்ப்புகள் கிராமங்களில் உள்ளவர்களுக்கும் கிடைக்கக்கூடிய வகையில் பதிவு செய்யும் அதிகாரத்தை பரவலாக்கலாமா என்பதைப் பரிசீலித்து வருகிறோம்.

* 304 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சுயமரியாதைத் திருமண முறைகளை வகுத்து அதனை அச்சிட்டு பத்திரப்பதிவு அலுவலகங்களின் மூலம் மக்களுக்கு வழங்கிடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. எஸ். வடிவேல் : ஊராட்சி மன்றங்களுக்கு அந்தப் பதிவுத் திருமண அதிகாரங்களைக் கொடுத்தால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கேள்வியும் அதனோடு

[1972 மார்ச் 4

திரு. ஏ. பாலையா : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குளச்சலில் முன்சிப் கோர்ட்டும். இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டும் அமைக்கவேண்டுமென்று ஏதாவது கோரிக்கை வந்திருக்கிறதா ? அரசு அதன் மீது என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது நெல்லையைப்பற்றிய கேள்வி.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவர் அவர்களே, போளூரிலிருந்து வழக்குகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வள்ளியூருக்கும் போளூருக்கும் என்ன சம்பந்தம்? மூலக்கேள்வி வள்ளியூரைப்பற்றியது.

திருமணங்கள் பதிவு.

* 303 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமணங்களைப் பதிவு செய்து கொள்ளும் அதிகாரம் கிராம முன்சிப் அல்லது ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்து திருமணங்களைப் பதிவு செய்து கொள்வதற்கான அதிகாரங்களை திருமணப்பதிவாளர்கள் (Marriage Registrars) நியமித்து அவர்களுக்கு வழங்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, திருமணப் பதிவு முறையின் பலன்கள் எல்லாத் தரப்பு மக்களுக்கும் கிடைக்கக் கூடிய நோக்கத்தின் அடிப்படையில் எப்படி ஜனன—மரண பதிவுக்குறிப்புகள் கிராம முன்சிப்களால் பதிவு செய்யப்படுகிறதோ அதைப்போன்று இதனையும் பதிவுசெய்ய ஏற்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது இருக்கிற விதிமுறைகளின்படி ஆங்காங்கு இருக்கிற பதிவாளர்கள் இந்து திருமணச்சட்டத்தின்கீழ் பணியாற்றுகின்றவர்கள் பதிவு செய்யலாம் என்று இருக்கிறது. இன்னும் அதிகமான வசதிக்கு